**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 13 of 2017

Deposition of D.W. 5

Name of the Witness: திரு. கதிரவன்

Date : 02.04.2026

**முதல் விசாரணை தொடர்ச்சி**

சம்மனில் கண்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். சர்வே எண் 294, 295, 296, 299க்கான பட்டா எண் 1258. யூடிஆரில் பாப்பாத்தி, கந்தசாமி, சேகர் பெயரில் உள்ளது. தற்போது கண்ணம்மாள், மாதையன், செல்வி பெயரில் உள்ளது. இந்த சர்வே எண்களுக்கான அ பதிவேட்டை எடுத்து வந்துள்ளேன். அ பதிவேடு **Ex.X1** ஆகவும், சிட்டா **Ex.X2** ஆகவும், எப்எம்பி **Ex.X3** ஆகவும், அடங்கல் **Ex.X4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

அ பதிவேடு 1985க்கு சம்பந்தப்பட்டது. சர்வே எண் 294, 295, 296, 299 பாப்பாத்தி, இளவழகன், கந்தசாமி, சேகர், காப்பாளர் பெயர் பாப்பாத்தி என்றுள்ளது என்றால் சரிதான். அதன் அசல் பட்டா 1258. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்சொன்ன ஆவணங்கள் கண்ணு (எ) மாதையன் மனைவி கண்ணம்மாள், கண்ணு (எ) மாதையன் பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் சரிதான்.

2) தற்போது மேற்சொன்ன சர்வே எண்கள் 2024ல் செல்வி பெயரிலும் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். செல்வியின் பெயர் கூட்டு பட்டாவாக சேர்ப்பதற்கு முன்பாக இணையத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு

விசாரித்த பிறகு தான் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். செல்வி பெயரில் பட்டா அவர் பெயரில் சேர்க்கப்பட்டது என்பதை ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது செல்வி பெயரில் கூட்டு பட்டாவாக மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த கூட்டு பட்டாவை பார்த்து செல்விக்கு எவ்வளவு பாத்தியம், கண்ணம்மாளுக்கு, மாதையனுக்கு எவ்வளவு பாத்தியம் என்று சொல்ல முடியாது என்றால் சரிதான்.

3) சாட்சி சொல்ல சம்மன் வந்த பிறகு நான் தாவா சொத்துக்களை போய் பார்த்தேன். நான் 01.09.2024ல் நான் கொரகோடஅள்ளி விஏஓஆக பணிக்கு சேர்ந்தேன். இந்த வழக்கு நிலுவையில் இருப்பதை பற்றி எனக்கு தெரியாது. தற்போது இந்த சர்வே எண்கள் எல்லாம் கரம்பாக உள்ளது. யாரும் விவசாயம் செய்யவில்லை. அடங்கலில் விவசாயம் செய்யாமல் தரிசாக உள்ளது என்று நான் எதுவும் குறிப்பிடவில்லை. 2025 - 2026 வருடத்திற்கு முன்பாக இந்த சர்வே எண்களில் என்ன என்ன பயிர் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. மின் இணைப்பு உள்ளது. அது யார் பெயரில் உள்ளது என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை.

<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வருவாய் துறை நிலை ஆவணங்கள் படி இணையதளம் மூலமாக பட்டா மாற்றம் செய்ய மனு தாக்கல் செய்தாலும், அதற்காக ஒரு கோப்பை பராமரித்து அதை சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்ப வேண்டும் என்றால் சரியல்ல. நான் தற்போது தாக்கல் செய்த ஆவணங்களில் அ பதிவேடு, எப்எம்பி க்கான பதிவேடுகள் எங்கள் அலுவலகத்தில் பராமரித்து

வருகிறோம், பட்டா, சிட்டாவிற்கான பதிவேடுகள் எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கபடுவதில்லை.

2) அரசாங்கம் விவசாய நிலங்களுக்கு ஜிபிஎஸ் மூலமாக இணையத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று உத்திரவு போடப்பட்டது. ஆனால் அந்த உத்திரவை எங்களால் செயல்படுத்தவில்லை. 8ஏ கோப்புகள் கிராம நிர்வாக அலுவலா் அலுவலகத்திற்கு அனுப்பபடுவதில்லை. இந்த வழக்கின் தரப்பினர்கள் யாரும் என்னிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது பட்டா மாற்றம் செய்தது தவறு என்றால் சரிதான். அடங்கலில் சாகுபடியாளர்கள் யார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.